**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை – 6**

**ந.க.எண்:073708/எம்/இ1/2019, நாள். .01.2020**

பொருள்: பள்ளிக்கல்வி– 'Pariksha Pe Charcha 2020'– தேர்வு பற்றிய கலந்துரையாடல் – 20.01.2020 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடல் – அனைத்து வகைப் பள்ளிகளிலும் நிகழ்ச்சியைக் காண நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்– சார்பு.

பார்வை:

1. Joint Secretary(EE–I), Department of School education and Literacy, MHRD, Govt. of India D.O.No:15–8/2019–Desk (MDM) , Dated:11.12.2019 and 26.12.2019
2. Govt.Lr.No.32748/SE 5(1)/2019–1, Dt:10.12.2019
3. பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் , ந.க.எண். 73708/எம்/இ1/2019, நாள்.13.12.2019 , 20.12.2019,24.12.2019 மற்றும் 26.12.2019.

பார்வை (1)ல் காணும் கடிதத்தில் மாணவர்கள் பொதுத்தேர்வை நம்பிக்கையுடனும் பயமின்றியும் எழுதும் வகையில் Pariksha Pe Charcha 2020 எனும் நிகழ்ச்சி மூலம் பாரதப் பிரதமர் அவர்கள் பள்ளி மாணவர்களுடன் 20.01.2020 அன்று புதுடில்லியில் உள்ள Talkatora ஸ்டேடியத்தில் உரையாற்றவுள்ளதாக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்ததற்கிணங்க, பார்வை–(3)ல் காணும் கடிதம் மூலம் பள்ளி மாணாக்கர்கள் கட்டுரைகளை இணையதள வழியில் சமர்ப்பித்திட அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட 20.01.2020 அன்று புதுடில்லியில் உள்ள Talkatora ஸ்டேடியத்தில் பாரதப் பிரதமர் அவர்களின் உரையை தூர்தர்ஷன் மற்றும் வானொலி உட்பட அனைத்து அரசு ஊடகங்களின் மூலம் நேரடியாக ஒளிப்பரப்பப்பட உள்ளது. இதனை பிரதம மந்திரி அலுவலக இணையதளங்கள் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தில் இயங்கும் நேரலை தளங்களான Youtube Channel of MHRD , Mygov.in, Facebook Live and Swayamprabha Channels of MHRD மூலமும் காணலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. இதன் தொடர்ச்சியாக, 20.01.2020 அன்று காலை 10.30 மணியளவில் துவங்கப்பட இருக்கும் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களின் உரையை அனைத்துப் பள்ளிகளிலும் காண்பதற்கும் கேட்பதற்கும் முன்னதாகவே

ஏற்பாடுகள் செய்யவும், இந்நிகழ்ச்சி சார்ந்து https://wetransfer.com/downloads/86a66a6eda90bfbf737115f678fd65a220200110110754/bd0cc20545468b5f4d3f1ba698ee5c1720200110110754/b3286c

என்ற இணைப்பில் உள்ள Pariksha Pe Charcha 2020 தொடர்பான படங்களையும் துண்டுப்பிரசுரங்களையும் பள்ளியின் தகவல் பலகை மற்றும் முக்கிய இடங்களில் காட்சிப்படுத்தி இந்நிகழ்ச்சியை அனைவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் ஏற்பாடுகள் செய்யவும்,

2. இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியர் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களிடம் தங்கள் வினாக்களை நேரடியாக கேட்கவும் அனுமதிக்கப்படுவர் என்பதாலும் அனைத்து வகைப் பள்ளிகளிலும் 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர்கள் இந்நிகழ்ச்சியினை தவறாது காணும் பொருட்டும்/ கேட்கும் பொருட்டும் தொலைக்காட்சிப்பெட்டி மற்றும் இதர சாதனங்கள் தயார் நிலையில் வைத்திடவும் அதற்கான செலவினங்களை மேற்கொள்ள Samagra Shiksha வின் திட்ட நிதியினை பயன்படுத்துவதற்கும்,

3. இந்நிகழ்ச்சியைக் கண்டு களித்த மாணாக்கர் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பின்னூட்டம் (Feedback) போன்ற தகவல்களை உள்ளடக்கிய புகைப்படங்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றைத் தொகுத்து அறிக்கையாக அளிக்குமாறு அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் தெரிவிக்க அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:

https://wetransfer.com/downloads/86a66a6eda90bfbf737115f678fd65a220200110110754/bd0cc20545468b5f4d3f1ba698ee5c1720200110110754/b3286c

பள்ளிக்கல்வி இயக்குநர்.

14/01/2020

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை–9
2. மாநிலத் திட்ட இயக்குநர், சமக்ர சிக்ஷா, சென்னை - 6
3. ஆணையர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை - 6

அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.